முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பூனைக்கண்ணார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.05.2019, செவ்வாய்க்கிழமை

1. **ஆறுமுகன் சக்தியாக வந்தநல்**
**அரங்கமகா ஞானியே தேசிகா**
**மாறுதலை மக்களிடை நிகழ்த்த**
**மாதவசியாக வந்த குருராசா**
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் நித்ய பிரசன்ன ஆசியை
தரணியிலே **விகாரி தகரின் திங்கள்**
**தக்க சப்தம திகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 7ம் நாள் 21.05.2019, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் பூனைக்கண்ணார் யானும்**
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரமான சத்ருருண ரோகம்
பாவகரும வினைகளும் விலக
4. விலக அரங்கன் காட்டுகின்ற
வேலவனின் சரவணஜோதி வழிபாடு
காலமதில் ஏற்று உலக மக்கள்
கண்ணியமுற வணங்கி வர
5. வருவதுடன் அரங்கன் தரும்
வள்ளலின் அருளமுது உண்டு
தருமபாதையை தொடர்ந்து வர
தன்னார்வ தொண்டுமிக்க மக்களாகி
6. ஆகியே கலியுகத்தார் ஞானபலம்
அரங்கன் சேவை வழி அடைவர்
அகிலமே அரங்கன் புகழ் பரவ
அளவிலா இறைசக்தி கூடியே
7. கூடியே உலகம் அமைதி பெறும்
கூடிட உலகம் பாதுகாப்பு பெறும்
தேடியே வேலவன் வழிபாட்டை
தேசங்கள் அனைத்தும் ஏற்க
8. ஏற்கவே எல்லோரும் சமமெனும்
இணையிலா சமத்துவநிலை பெருகி
அற்புதம்பட மக்களுக்குள்ளே
ஆனந்தமுற சகோதரத்துவம் பெருகி
9. பெருகியே உலக மக்களிடை
பெருந்தன்மை தயவு உருவாகி
முருகன் ஆளுமை உருவாகும்
முழுமை ஞான உலகம் ஆகும்

10. ஆகவே கலிமீட்பின் குருவே
ஆறுமுக அரங்க ஞானியே
வகைபட உன் நாமசெபம்
வரலாறு படைக்கும் உலகினில்

11. உலகினில் உன் தருமமே
உயர்வுடன் பெருமாற்றம் தரும்
அழகன் முருகப்பெருமான் துணைபட
அரங்கனுன் அருள் பெற்றவரே வெல்வர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பூனைக்கண்ணார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் அருட்சக்தி வடிவமாக அவதாரமாக வந்துதித்திட்ட அரங்கமகா ஞானியே ஞானதேசிகா உலக மக்களிடையே அற்புதமான மாறுதல்களை மக்களிடையே நிகழ்த்தி ஞானவழி நடத்திட மகா ஞான குருநாதனாக வந்துதித்த குருராசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 7ம் நாள் 21.09.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பூனைக்கண்ணார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பூனைக்கண்ணார்.

மக்களுக்கு மிகவும் துன்பங்களை உண்டாக்குகின்ற எதிரிகளால் வருகின்ற துன்பங்களும் கடனால் வரும் துன்பமும் தீராத நோய்களும் மக்கள் செய்திட்ட பாவகரும வினைகளும் விலகிட, ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்றதும் ஞானம் தரவல்லதுமான முருகப்பெருமானை ஜோதி சொரூபமாக வணங்குகின்றதான சரவணஜோதி வழிபாடுகளை அவரவரும் ஏற்றுக் கொண்டு தினம்தினம் மறவாமல் வழிபட்டுவர வேண்டும். ஆறுமுக அரங்கன் உலக நலன் கருதி மக்கள் கடைத்தேறிட ஞானிகளை வணங்கி அருளுகின்ற வள்ளல் ஞானியரின் அருளமுதாம் குடில் உணவினை உண்டு வருவதுடன் அரங்கன் வழிவகுத்து தந்திட்ட தூய தரும நெறியினை ஏற்று தர்மத்தின் வழியிலே தவறாது நடந்து வருவதுடன் மக்களெல்லாம் தன்னலம் மறந்து பொதுநலமாக செயல்பட்டு தன்னார்வம்மிக்க தொண்டுள்ளம்மிக்க மக்களாக ஆகி கலியுக மக்களெல்லாம் ஞானபலம் பெற்று அரங்கரின் தொண்டுகள் மூலமாக ஞானம் பெறும் வாய்ப்பினை பெற்று சிறப்படைவார்கள்.

உலகமெலாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் புகழ் உலகமெலாம் பரவபரவ உலக மக்களிடையே இறைசக்தியான ஞானிகளின் அருள்பலம் பெருகி இந்த உலகமே அமைதிபெறும். ஞானிகளின் அருட்சக்தி பெருகபெருக உலகம் பாதுகாப்பை பெறும். உலக நாடுகள் எல்லாம் ஆறுமுக அரங்கனின் வழிபாடான முருகப்பெருமானின் சரவணஜோதி வழிபாட்டினை ஏற்றுக் கொண்டு வழிபட உலக மக்கள் இடையே உள்ள சாதி, மத, இன, மொழி பேதங்கள் எல்லாம் மறைந்து இணையற்ற ஒற்றுமையும் சமத்துவநிலையும் பெருகி, மக்களுக்குள்ளே அற்புதமாய் ஆனந்தமான சமத்துவம் நிலைபெற்று மக்களிடையே சகோதரத்துவம் பெருகி, பெருந்தயவும், தயவும் உருவாகி உலகமெலாம் முருகப்பெருமானின் தலைமையில் ஞானஆட்சி உருவாகும். உலகம் கலியுகத்தினின்று மாறி முழுமை ஞானஉலகமாக மாறிடும்.

கலியுக மீட்பின் மகா ஞானியே மகா ஞானகுருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே முறையோடு உமது நாமங்களை பயபக்தியுடன் நாமஜெபமாக ஜெபித்து வர, உமது நாமஜெபம் உலகினில் வரலாறு படைக்கும். உமது தருமமே உயர்வுடன் உலகினில் பெருமாற்றத்தினை தந்தருளும் **ஆறுமுக அரங்கமகா ஞானியே உமது அருள் பெற்றவரே முருகப்பெருமானின் துணையுடன் ஞானத்தினை வெல்வார்கள், வென்று ஞானமடைவார்கள்** எனக் கூறுகிறார் மகான் பூனைக்கண்ணார்.

–சுபம்–